ஸ்ரீ:

ஸ்ரீமதே நிக3மாந்தமஹாதே3ஶிகாய நம:

ஸ்ரீமாந் வேங்கடநாதா2ர்ய: கவிதார்க்கிககேஸரீ ।
வேதா3ந்தாசார்யவர்யோ மே ஸந்நித4த்தாம் ஸதா3 ஹ்ருதி3 ॥

ஸ்ரீவண்சடகோப ஸ்ரீமந்நாராயண வேதாந்த யதீந்த்ர மகாதேசிகன்
அருளிச்செய்த

# ॥ ஸ்ரீ ஆதிவண்சடகோப யதீந்த்ர மகாதேசிகன் அடைக்கலப்பத்து ॥

*This document* has been prepared by*

***Sunder Kidambi***

*with the blessings of*

ஸ்ரீ ரங்க3ராமாநுஜ மஹாதே3ஶிகன்

**His Holiness *śrīmad āṇḍavan* of *śrīraṅgam***

*This was typeset using skt, LaTeX, Itrans, and the iitmtam font.

ஸ்ரீ:
ஸ்ரீமதே ராமாநுஜாய நம:

# ॥ ஸ்ரீ ஆதிவண்சடகோப யதீந்த்ர மகாதேசிகன் அடைக்கலப்பத்து ॥

லக்ஷ்மீந்ருஸிம்ஹவரஶாஸநஶேகரோ ய:
தார்க்ஷ்யேண நாதமுகரேண ததுத்யமே ச ।
ஆஜ்ஞப்த ஆதிஶடகோபயதீந்த்ர காதா:
சக்ரே பராங்குஶயதீந்த்ரமஹம் தமீடே ॥

ஒன்பதுரு நரசிங்கனுகந்துறையும் திருப்பதிகள்
அன்புடனே பணிசெய்யும் அற்புதனாமாசிரியன்
முன்புற்ற சடகோபன் மொய்கழலை ஏத்தியெழும்
பண்புடைய பராங்குசன் தன் பாதமலர் பரவினமே

‡ஆதிமறையுருவான ஆதிப்புள் வெற்பதனில்
சோதியென உலகெல்லாம் சுகம் பெறவே வந்துதித்த
ஆதிகுரு நரசிங்கன் அருளாலே யோகியான
ஆதிவண்சீர்ச் சடகோபன் அடியிணை யென் முடிமணியே (1)

மணியானவாருயிராம் மணிமுத்துத் தாழ்வடத்து
மணியாகப் பெரும்பூதூர்ப் புரந்தன்னில் வந்துதித்துப்
பிணி தீர்த்த தேசிகனே பின்னும் இவண் வந்தனைத்தும்
பணிய நின்ற சடகோபன் பதப்பூவை அடைந்தேனே (2)

அடைந்தென்றும் அடங்காத ஆங்காரமாமலையைத்
தடிந்திட்ட பெரியோனைத் தடுத்த திறலிரணியனை
இடந்திட்ட நரசிங்கன் இணையடியை எப்பொழுதும்
இடங்கிட்டி உறைகின்ற இம்முனியை அறிந்தேனே (3)

அறிந்தென்றும் அவன் அருளே அம்புவியிற் புகலின்றிச்
செறிந்தெங்கும் செலநின்ற செல்வமுடை வேங்கடவன்

அறந்திகழுமாமணியின் அவதாரமாங்குருவே
    நிறைந்திங்கேய் இம்முனியாய் நிற்கின்றதுரைப்பேனே (4)

உரைத்த தன்னுத்தம குணமே உய்வதென்று தன்னருளால்
    கரந்தெங்கும் ஓங்கிறைவன் கலியாண குணங்களையே
உரைக்கின்ற பாடியத்தை உம்பர்தொழ எப்பொழுதும்
    உரைக்கின்ற மாமுனியை உரைத்துரைத்தின்றுயர்ந்தேனே (5)

உயர்ந்ததென்றும் உத்தமனாய் உதவுஞ்சீர்த் திருமாலின்
    பயந்தவிர்க்கு மெய்ப்பதமே பதமென்று பேசுகின்ற
மயர்வில்லா மூன்றினது மாசறு சீர்ச்சாரம் எங்கும்
    உயர்பெறுத்துமுயோகி பதம் உற்றதலான் மற்றிலனே (6)

மற்றவனாம் தேசிகன்றன் வண் புகழின் வண்மை எண்ணிப்
    பற்றிலனா அவன் பூண்ட பாங்குடை நற்கோசம் ஏந்தி
எத்திசையும் அக்கோசம் ஏந்துகின்ற கையுடனே
    புத்தியுள்ளே வரும் யோகிப் பொன்னடியை மறவேனே (7)

‡மறவாதே மாநிலத்தில் வண் புகழின் வண்மை எண்ணிப்
    பிறவாதே பூமிதனிற் பின்னனைத்து முய்யவெண்ணி
இறையவனே புரட்டாசித் திருக்கேட்டையிற் குருவாய்ப்
    பிறந்திட்ட சடகோபன் பொன்னருள் நான் பெற்றேனே (8)

‡பெற்ற தாயாய்ப் பத்தருக்குப் பேதமில்லாத் தந்தையுமாய்
    மற்றுமுள்ள சுற்றமுமாய் மன்னிய பொன்னிராசியுமாய்
எத்திசையும் என்னுடைய இன்னுருவாம் பாக்கியமாய்
    உற்றமுனி சடகோப! உன் கழல்கள் அகலேனே (9)

‡அகலாமே மாறனுரை அருத்தமுடன் அனைவர்க்கும்
    தகவாலே உரைக்கின்ற தன்மையுள்ள மாமுனியைப்
புகலாலே பற்றினார்க்குப் புரக்கின்ற நரசிங்கன்
    தகவாலே முடிசூடித் தரித்தாரைப் பற்றினனே (10)

‡பத்தியுள்ள சீநிவாச பரயோகி தன் பதத்தில்
    பத்தி பெறும் யோகியெனும் பராங்குசன்றன் சீருரையாம்

எத்திசையும் ஏத்த நின்ற சடகோபன் அந்தாதி
முத்தி தரு நரசிங்கன் முன்னருளுக்காதினமே (11)

॥ ஸ்ரீவண்சடகோப ஸ்ரீமந்நாராயண வேதாந்த யதீந்த்ர
மகாதேசிகன் திருவடிகளே சரணம் ॥